சின்னாளபட்டி பேரூர் கழக பொறுப்பாளர் மற்றும் பொறுப்புக்குழு உறுப்பினராக தலைமைக் கழகத்தில் இருந்து நியமனம் செய்யப்பட்டவர்கள் அமைச்சர் ஐ.பெரியசாமியை சந்தித்து சால்வை அணிவித்து வாழ்த்துப் பெற்றனர். அருகில் ஆத்தூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் பிள்ளையார்நத்தம் முருகேசன் உட்பட திமுக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

தூத்துக்குடி மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பாக ஒன்றிய அரசைக் கண்டித்து மாபெரும் பொதுக்கூட்டம் அமைச்சர் பெ.கீதா ஜீவன் தலைமையில் நடைபெற்றது. இதில் பொன். முத்துராமலிங்கம், மேயர் ஜெகன் பெரியசாமி, இன்பா ஏ.என்.ரகு, சஞ்சய், ஆனந்த சேகரன், ராஜ் மோகன் செல்வின், க.பிரதிப், ம.மகேந்திரன், வே.ராதாகிருஷ்ணன், ரா.பாரதி, பூ.ஜோசப்அமல்ராஜ், அருண் சுந்தர், சங்கர நாராயணன், சிவக்குமார் ,முகமது ஜெயலாப்தின், பிரவின்குமார், துறைமுகம் புளோரன்ஸ், சரத் பாலா, அன்பழகன், துணை மேயர் ஜெனிட்டா செல்வராஜ், அன்னலட்சுமி கோட்டீராஜ், மற்றும் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர். சி.எம்.மதியழகன் கூட்டத்திற்கான ஏற்பாட்டினை செய்திருந்தார்.

கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழா

மதுரை வடக்கு மாவட்டம் மேலூர் தொகுதி தி.மு.க. சார்பில் ஜல்லிக்கட்டு விழா!

மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் நடைபெறுகிறது!

மதுரை, மார்ச் 16 –

மதுரை வடக்கு மாவட்டம் மேலூர் தொகுதி திமுக சார்பில் கழக தலைவர், தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72 வது பிறந்த நாளை முன்னிட்டு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் இன்று (16ஆம் தேதி) அலங்காநல்லூர் அருகில் உள்ள கீழக்கரை கிராமத்தில் அமைந்திருக்கும் கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கத்தில் மாபெரும் ஜல்லிக்கட்டு விழா வெகு சிறப்பாக நடைபெற உள்ளது. அதன்விபரம்

தமிழ்நாட்டில் திராவிட மாடல் ஆட்சி நடத்தி வரும் முதல்வர், கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்தநாள் விழா மதுரை வடக்கு மாவட்ட திமுக சார்பில் மாவட்டம் முழுவதும் பல்வேறு நலத் திட்ட உதவிகள் வழங்கி தொடர்ச்சியாக சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக மதுரை வடக்கு மாவட்டம் மேலூர் சட்டமன்ற தொகுதி திமுக சார்பாக இன்று (16.3.2025 ஞாயிற்றுக்கிழமை) காலை ஏழு மணி அளவில் அலங்கநல்லூர் அருகில் உள்ள கீழக்கரை கிராமத்தில் அமைந்திருக்கும் கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கில் மாபெரும் ஜல்லிக்கட்டு விழா நடைபெற உள்ளது.

இவ்விழாவை மதுரை வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமை ஏற்றுக் கொடியசைத்து துவக்கி வைக்க உள்ளார் இதில் மதுரை வடக்கு மாவட்ட கழக மாநில நிர்வாகிகள் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ., கருதியாகராஜன், எம்.ஆர்.எம். பாலசுப்பிரமணியன், ஆசைக்கண்ணன், பொம்மதேவன், எம்.சோமசுந்தர பாண்டியன், புதூர் சேகர், வடிவேல் முருகன், கே.தனச்செல்வம், ஜி.பி.ராஜா, நேரு பாண்டியன், பூபதி, ஆர்.கணேசன், வீர கணேசன், வழக்கறிஞர் கலாநிதி, கலைகார்த்திகேயன், மதுரை பாலா, டாக்டர் செல்வகுமார், டாக்டர் திலீப் ராஜ கண்ணப்பன், நாகினி செந்தில்குமார், ஆர்.கிருஷ்ணகுமார், நகர, ஒன்றியக் கழகச் செயலாளர்கள் முகமது யாசின், குமரன், கிருஷ்ணமூர்த்தி, பாலகிருஷ்ணன், ராஜராஜன், ராஜேந்திரபிரபு, பழனி மற்றும் ஒன்றிய செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பகுதி செயலாளர்கள், நிர்வாகிகள், மேலூர் தொகுதி கழக நிர்வாகிகள். கழகத்தினர், கழக முன்னோடிகள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், ஜல்லிக்கட்டு ஆர்வலர்கள், பொதுமக்கள் என பெரும் திரளானோர் பங்கேற்க உள்ளார்கள்.

மேலும் பார்வையாளர்கள் குடும்பத்துடன் அமர்ந்து கட்டணம் இல்லாமல் கண்டு களிக்கும் வகையில் சிறப்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. பொதுமக்கள் ஜல்லிக்கட்டு விழாவை கண்டு மகிழும் வகையில் மதுரையின் பல்வேறு பகுதியிலிருந்து சிறப்பு பேருந்து வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அரியலூர் மாவட்டம்

கீழகாவட்டாங்குறிச்சியில் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து பொதுக்கூட்டம்!

அமைச்சர் சா.சி.சிவசங்கர் பேச்சு!

அரியலூர், மார்ச் 16 –

அரியலூர் மாவட்டம் கீழகாவட்டாங்குறிச்சியில் தமிழ்நாடு முதலமைச்சரின் 72 ஆவது பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தி.மு.க. மாவட்டச் செயலாளரும் போக்குவரத்து துறை அமைச்சருமான சிவசங்கர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

அப்பொழுது இன்றைக்கு தமிழ்நாடு கல்வியிலே மேலே மேலே வந்து கொண்டிருப்பதை பார்க்கிறோம் கலைஞர் கொண்டு வந்த பெண் குழந்தைகள் படித்தால் உதவி தொகை தற்போதைய முதலமைச்சர் கொண்டுவந்த அரசு பள்ளியில் பயின்று கல்லூரியில் சேரும் பெண் குழந்தைகளுக்கு புதுமைப்பெண் திட்டத்தின் மூலம் மாதம் ஆயிரம் ரூபாய் என திமுக அரசின் திட்டங்களால் 50% ஆக இருந்த கல்லூரியில் படிக்கும் பெண் குழந்தைகள் தற்போது 80 சதவீத பெண் குழந்தைகள் கல்லூரியில் பயின்று வருகின்றனர்.

இன்னும் 5 வருடத்தில் தமிழ்நாட்டிலே எல்லா பெண் குழந்தைகளும் 12 ஆம் வகுப்பு முடித்தால் கல்லூரி முடித்தவர்களாக இருப்பார்கள். இது இந்தியாவில் எந்த மாநிலத்திலும் கிடையாது கல்வி அறிவு வந்துவிட்டால் அவர்கள் எந்த தொழில் செய்தாலும் முன்னேற்றமடைவார்கள் என்பதற்காக தான் நமது முதலமைச்சர் படிப்பை கொடுக்கிறார்.

ஆனால் வட இந்தியாவில் படிக்க வேண்டாம் படிப்பதற்கு கொடுக்கப்பட்ட பணத்தை வைத்து கோயிலை கட்டுகிறேன் என கோடி கோடியாக செலவு செய்து கோயிலை கட்டுகிறார்கள். ஏழை மக்களின் வரிப்பணத்தை வாங்கி மக்களுக்கு கொடுக்காமல் கோயிலை கட்டுகிறார்கள். ஜி.எஸ்.டி. உள்ளிட்ட பல்வேறு வரிகள் மூலம் மத்திய அரசு நமது பணத்தை கொள்ளை அடித்து வடமாநிலங்களில் கொடுக்கிறார்கள் அதற்கு என்ன காரணம் என்றால் வடமாநிலங்களில் உள்ள எம்பி தொகுதிகளில் வெற்றி பெற வேண்டும் ஆந்திரா தமிழ்நாடு கேரளா கர்நாடகம் பற்றி கவலைப்பட வேண்டாம் அவங்க யாருக்காவது ஓட்டு போடட்டும் வடமாநிலங்களில் நம்ம ஜெயித்து வந்து ஆட்சி நடத்தலாம் என்பதற்காக தான் தொகுதி மறுசீரமைப்பு என்ற திட்டத்தை கொண்டு வர பார்க்கிறார்கள். அதையும் நமது முதலமைச்சர் எதிர்க்கிறார் இன்னொரு முக்கியமானது இந்தி திணிப்பு. இந்தி திணிப்பதை முதன் முதலில் எதிர்த்த மாநிலம் தமிழ்நாடு தான் காரணம் இந்தி வந்தால் தமிழ் அழியும் எனது தாய்மொழி அழியும் எனது தாய் மொழியை விட்டு உன்னை காப்பாற்ற வேண்டிய அவசியம் இல்லை என இந்தி திணிப்பிற்கு எதிராக போராடுகிறோம். நமது மீது இந்தியை திணித்தால் நம் மீது இந்திய திணித்தாள் நாளைக்கு மத்திய அரசாங்கம் நடத்துகின்ற தேர்வுகள் எல்லாம் இந்தியில் நடத்துவார்கள், தாய் மொழியை இந்தியை கொண்டவன் அதிக மார்க்கு வாங்குவானா மூன்றாவது மொழியாக இந்தியை படிக்கும் நம்ம வாங்குவோமா நம்மால் வாங்க முடியாது. இந்தியை தாய் மொழியாகக் கொண்டவன் அதிக மார்க் வாங்குவார்கள். அவர்கள்தான் வேலைக்கு வருவதற்கான வாய்ப்பு ஏற்படும். இதுதான் அவர்களது திட்டம். இதனை கருத்தில் கொண்டு தான் பேரறிஞர் அண்ணா கொண்டு வந்தார் நாங்க தமிழையும் ஆங்கிலத்தையும் படித்துக் கொள்கிறோம் என்று.

அதனால்தான் நமது மாநிலத்தில் பல கிராமங்களில் உள்ள மாணவர்கள் வெளி நாடுகளில் போய் வேலை பார்க்கிறார்கள் என்றால் அது அண்ணா கொண்டு வந்த இருமொழி திட்டத்தால்தான். அதனால்தான் அந்த வழியில் நமது முதலமைச்சர் மிகத் தெளிவாக ஆனித்தரமாக வாதிட்டு ஒன்றிய அரசாங்கத்தை எதிர்த்து வருகிறார் இந்தியாவில் பல முதலமைச்சர்கள் உள்ளார்கள் மோடியை எதிர்த்து தைரியமாக பேசக்கூடிய முதல் முதலமைச்சர் நமது முதலமைச்சர் தான் அவரால் தான் தமிழ்நாட்டை காப்பாற்ற முடியும். தமிழ் நாட்டை காப்பதற்கு நமது முதலமைச்சருக்கு பின்னால் நாம் அணிவகுப்பதற்கான அவசியம் உள்ளது என அமைச்சர் சா.சி.சிவசங்கர் அவர்கள் பேசினார்.



தூத்துக்குடி திருச்செந்தூர் ஒன்றியம் நா.முத்தையாபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் டி.வி.எஸ் அறக்கட்டளை சார்பில் கூடுதல் வகுப்பறை ரூ 21 லட்சம் மதிப்பீலான கட்டிடத்தினை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் திறந்து வைத்தார். அருகில் விஜயக்குமார், நந்தகோபால், கோபி, எஸ்.ஆர்.எஸ். உமரிசங்கர், பை.மூ. ராமஜெயம், மற்றும் செங்குழி ஏ.பி ரமேஷ், வாள் சுடலை, கே.டி.சி முருகன், வழக்கறிஞர் வி.பி.செல்வக்குமார், பாலசிங், இளங்கோ, மால் சுரேஷ், கழக நிர்வாகிகள் உள்ளனர்.

‘எல்லார்க்கும் எல்லாம்’ எனும் உயரிய நோக்கத்துடன் தாக்கல் செய்யப்பட்ட பட்ஜெட்!

தமிழ்நாட்டின் மேம்பட்ட எதிர்கால வளர்ச்சிக்கு உறுதியான அடித்தளம்!

‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, மார்ச் 16 –

விளிம்பு நிலை மக்களை அரவணைக்கும் வகையில் ‘எல்லார்க்கும் எல்லாம்’ எனும் உயரிய நோக்கத்துடன் தாக்கல் செய்யப்பட்ட பட்ஜெட் எனவும் தமிழ் நாட்டின் மேம்பட்ட எதிர்கால வளர்ச்சிக்கு உறுதியான அடித்தளமாக இந்த பட்ஜெட் அமைந்துள்ளது என வும் தினகரன் நாளேடுதலையங்கத்தில் பாராட்டுத் தெரிவித்துள்ளது.

தினகரன்

மார்ச் 15, 2025 சனிக்கிழமை

எல்லார்க்கும் எல்லாம்

தமிழ்நாடு அரசின் 2025-26-ம் நிதி ஆண்டுக்கான பொது பட்ஜெட்டை சட்டப்பேரவையில் நிதியமைச்சர் தங்கம் தென்னரசு நேற்று தாக்கல் செய்தார். சட்டப்பேரவை தேர்தல் அடுத்த ஆண்டு நடைபெற உள்ள நிலையில் பலத்த எதிர்பார்ப்புகளுக்கு நடுவே, இந்த பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டது. நிதி அமைச்சராக தங்கம் தென்னரசு தாக்கல் செய்துள்ள 2-வது பட்ஜெட். இதுவாகும். திராவிட மாடல் அரசு பொறுப்பேற்று 4 ஆண்டுகள் நிறைவடைந்த நிலையில், 5ம் ஆண்டில் தாக்கல் செய்யப்படுகின்ற பட்ஜெட் என்பதால் அனைத்து தரப்பினரிடையேயும் பலத்த எதிர்பார்ப்புகள் இருந்தது. பட்ஜெட் உரையை தாக்கல் செய்து பேசிய நிதியமைச்சர் தங்கம் தென்னரசு, "இந்தியாவின் 2-வது பெரிய பொருளாதாரம் கொண்ட மாநிலம் தமிழ்நாடு" என்று பெருமிதம் தெரிவித்தார். மேலும், "பன்முக வளர்ச்சியை நோக்கி தமிழ்நாடு முன்னேறி வருகிறது. மனிதநேயம், சமூக நீதி, பொருளாதார வளர்ச்சியை இலக்காகக் கொண்டு தமிழ்நாடு நடைபோடுகிறது. சமநிலை தவறாமல் தமிழ்நாட்டை வழிநடத்துவோம்" என்றார்.

தமிழ்நாடு அரசின் 2025 -26ம் நிதி ஆண்டுக்கான பொது பட்ஜெட்டை சட்டப்பேரவையில் நிதி யமைச்சர் தங்கம் தென்னரசு நேற்று தாக்கல் செய்தார். சட்டப்பேரவை தேர்தல் அடுத்த ஆண்டு நடைபெற உள்ள நிலையில் பலத்த எதிர்பார்ப்புகளுக்கு நடுவே, இந்த பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டது. நிதி அமைச்சராக தங்கம் தென்னரசு தாக்கல் செய்துள்ள 2வது பட்ஜெட் இதுவாகும்.

திராவிட மாடல் அரசு பொறுப்பேற்று 4 ஆண்டுகள் நிறைவடைந்த நிலையில், 5ம் ஆண்டில் தாக்கல் செய்யப்படுகின்ற பட்ஜெட் என்பதால் அனைத்து தரப்பினரிடையேயும் பலத்த எதிர்பார்ப்புகள் இருந்தது. பட்ஜெட் உரையை தாக்கல் செய்து பேசிய நிதியமைச்சர் தங்கம் தென்னரசு, “இந்தியாவின் 2வது பெரிய பொருளாதாரம் கொண்ட மாநிலம் தமிழ்நாடு” என்று பெருமிதம் தெரிவித்தார். மேலும், “பன்முக வளர்ச்சியை நோக்கி தமிழ்நாடு முன்னேறி வருகிறது. மனிதநேயம், சமூக நீதி, பொருளாதார வளர்ச்சியை இலக்காகக் கொண்டு தமிழ்நாடு நடைபோடுகிறது. சமநிலை தவறாமல் தமிழ்நாட்டை வழிநடத்துவோம்” என்றார். முதன்முறையாக பட்ஜெட் விபரங்களை பொதுமக்கள் எளிதில் தெரிந்து கொள்ள வசதியாக தமிழ்நாடு முழுவதும் மக்கள் அதிகம் கூடும் 900க்கும் மேற்பட்ட இடங்களில் பெரிய திரைகளில் நேரலை செய்யப்பட்டது. பொதுமக்களின் செல்போன்களுக்கு பட்ஜெட்டில் இடம் பெற்றிருந்த விபரங்கள் குறுந்தகவல்களாக வும் அனுப்பப்பட்டன.

இந்த பட்ஜெட்டை தொழில்துறையினர், பொதுமக்கள், வணிகர்கள், அரசு ஊழியர்கள் என அனைத்து தரப்பினரும் மிகவும் ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனர். அவர்கள் அனைவரின் எதிர்பார்ப்புகளுக்கு ஏமாற்றமளிக்காத வகையில், பட்ஜெட்டில் ஏராளமான அறிவிப்புகள் இடம் பெற்றிருந்தன. கிராமங்கள் முதல் பெருநகரங்கள் வரையில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், புதிய தொழில் வாய்ப்புகளை உருவாக்குதல், அனைத்து துறைகளையும் சார்ந்த புதிய திட்டங்கள், புதிய கல்லூரிகள் தொடங்குதல், திறன்மிகு மையங்கள் உருவாக்குதல், மகளிரை தொழில் முனைவோராக உயர்த்திடும் பெருந்திட்டங்கள், நகர்ப்புற பகுதிகளில் பெண்கள் பாதுகாப்பை உறுதி செய்தல், அரசு ஊழியர்கள், அலுவலர்களுக்கு ஈட்டிய விடுப்பு 15 நாட்கள் வரை சரண் செய்து பணப்பலன் பெறும் நடைமுறையை மீண்டும் செயல்படுத்துதல், மாநிலம் முழுவதும் பல்வேறு வகையான தொழிற்பூங்காக்கள் உருவாக்குதல், வேட்டைப் பறவைகள் ஆராய்ச்சி மையம், மின்சார பேருந்துகள், அறிவியல் மையம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் குறித்த அறிவிப்புகள் பட்ஜெட்டில் வெளியாகி மக்களிடம் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

திருக்குறளை 193 மொழிகளில் மொழி பெயர்த்தல், சிங்கப்பூர், துபாய், மலேசியாவில் தமிழ்ப் புத்தகக் கண்காட்சி, தமிழ்நாடு முழுவதும் தொல்லியல் மற்றும் அகழ்வாராய்ச்சி ஆய்வு மேற்கொள்ளுதல் என தமிழ்மொழியை உலக அரங்கில் கொண்டு செல்லவும், தமிழர்களின் தொன்மை நாகரிகத்தை உலகம் அறியச் செய்யவும் பல அறிவிப்புகள் இடம் பெற்றிருந்தன.

இப்படி மகளிர் நலன் காக்கும் மாபெரும் திட்டங்கள், ததும்பி வழியும் தமிழ்ப் பெருமிதம், இளைஞர்களுக்கு உலகை வெல்லும் உயர் தொழில்நுட்பம், தமிழ் நாடெங்கும் வேலைவாய்ப்புகளை அள்ளித்தரும் தொழிற்பூங்கா திட்டங்கள், புதிய நகரம், புதிய விமான நிலையம், புதிய நீர்த்தேக்கம், அதிவேக ரயில் சேவை என நவீனத் தமிழ்நாட்டை உருவாக்கிடும் முன்முயற்சிகள் பல பட்ஜெட்டில் இடம் பெற்றுள்ளன. விளிம்பு நிலை மக்களை அரவணைக்கும் வகையில், ‘எல்லார்க்கும் எல்லாம்’ எனும் உயரிய நோக்கத்துடன் தமிழ்நாட்டின் மேம்பட்ட எதிர்கால வளர்ச்சிக்கு உறுதியான அடித்தளமாக இந்த பட்ஜெட் அமைந்துள்ளதாக அனைத்துத் தரப்பினராலும் பாராட்டப்படுகிறது.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நெய்வேலி சட்டமன்றத் தொகுதி

தகவல் தொழில்நுட்ப அணி, பாகமுகவர்கள், ஆலோசனைக் கூட்டம்!

சபா.இராசேந்திரன் எம்.எல்.ஏ. சிறப்புரை!

கடலூர், மார்ச் 16 –

நெய்வேலி சட்டமன்ற தொகுதி தகவல் தொழில் நுட்ப அணி மற்றும் பாக முகவர்கள்கள் ஆலோசனைக் கூட்டம் என்.எல்.சி, ஆர்ச் கேட் எதிரில் உள்ள கே.என்.டி.திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா.இராசேந்திரன் தலைமை தாங்கி சிறப்புரையாற்றினார். நெய்வேலி சட்டமன்ற தொகுதி பார்வையாளர் தியாக. இளையராஜா முன்னிலை வகித்தார்.

மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணியின் துணை ஒருங்கிணைப்பாளர் பழனி. சுரேஷ் வரவேற்புரையாற்றி விளக்கமளித்தார்.

கூட்டத்தில் சபா.இராசேந்திரன் எம்.எல்.ஏ., திமுக தகவல் தொழில்நுட்ப அணியினர், சமூக வலைதளத்தை கையாள்வது குறித்து BLA2 மற்றும் BLC யினருக்கு ஆலோசனை வழங்கியும்,

மேலும் சமூக வலைதள பயன்பாட்டின் நோக்கம் குறித்து கூட்டத்தில் ஆலோசனை வழங்கப்பட்டது. குறிப்பாக தகவல் தொழில் நுட்ப அணியினரோடு BLA2 மற்றும் BLC நிர்வாகிகள் இணைந்து சமூக வலைதளத்தை சிறப்பாக பயன்படுத்துவது குறித்து விளக்கி பேசினார்.

விக்கிரவாண்டி மேற்கு ஒன்றியத்தில் முதல்வர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு நலத்திட்ட உதவிகளை விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி வழங்கினார். அன்னியூர் சிவா எம்.எல்.ஏ., ம.ஜெயச்சந்திரன், எம்.தேன்மொழி, வேம்பி.ரவி, ஜெய.ரவிதுரை, ஜெ.ஜெயபால், சங்கீதா அரசி, ஜீவிதா, மீனா வெங்கடேசன் மற்றும் பலர் உள்ளனர்.

சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் சமூக நலத்துறை சார்பில் கர்ப்பிணி பெண்களுக்கான அரசு சார்பில் நடைபெற்ற வளைகாப்பு நிகழ்ச்சியில் மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் திருமதி தமிழரசி ரவிக்குமார் கலந்துகொண்டு வாழ்த்தினார். இந்த நிகழ்ச்சியில் மானாமதுரை நகர் கழக செயலாளர். க.பொன்னுச்சாமி, மானாமதுரை நகரமன்ற துணைத் தலைவர் பாலசுந்தர் ஒன்றிய செயலாளர்கள் துரைராஜா மணி, மா. அண்ணாதுரை முன்னாள் ஒன்றிய குழு தலைவர் லதா அண்ணாதுரை, மற்றும் சமூகநலத்துறை அதிகாரிகள் கலந்து கொண்டார்கள்.